**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 141/2003**
**நாள்.01.04.2026**
**வா.சா.1- காளிமுத்து**
**த/பெ - ராமசாமி**
**12ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. மாண்பமை சார்பு நீதிமன்றம், வேடசந்தூரில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.188/2018 வழக்கில் இவ்வழக்கின் 12ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை என்ன காரணத்திற்காக இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது 12ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் வாங்கியதாலும், அவர் எனது பக்கத்து வீட்டுக்காரராக இருந்து இவ்வழக்கின் விவரம்பற்றி தெரிந்துகொண்டே தாவா சொத்தை கிரையம் வாங்கியதால் அவருடைய நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன்.

2. மேற்படி 188/2018 வழக்கின் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ள சுப்பிரமணி தற்போது உயிருடன் உள்ளார் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.6ல் கண்ட சொத்திலும், வா.சா.ஆ.7ல் கண்ட சொத்திலும் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ல் கண்ட சொத்தை பொறுத்து இந்த 12ம் பிரதிவாதிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றால் சரியல்ல.

4. 12ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய 25.04.2018க்கு பின்பு தான் வா.சா.ஆ.6 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பு 30.05.2018ம் தேதி 12ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதற்கு முன்பே தெரியும்.

5. வா.சா.ஆ.7ல் கொடுக்கப்பட்டுள்ள தினத்தந்தி நாளிதழ் விளம்பரத்தை படித்திருந்தால் தான் அதுபற்றி தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

6. 12ம் பிரதிவாதிக்கு படிப்பறிவு இல்லாததால் செய்தித்தாள் வாசிப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரிதான். அதே போல் 12ம் பிரதிவாதியின் கணவருக்கும் செய்திதாள் வாசிக்கும் பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 செய்தித்தாள் விளம்பரம் குறித்து 12ம் பிரதிவாதிக்கோ, அவரது கணவருக்கோ எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.7ல் தாவா வழக்கு நிலுவையில் இருப்பதாகவும், அந்த சொத்து

குறித்து எந்த வில்லங்கமும் ஏற்படக்கூடாது என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றாலும், நீதிமன்ற தடை உத்தரவு பற்றி எதுவும் வா.சா.ஆ.7 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

8. வழக்கு தாக்கல் செய்த பின்பு வழக்கு சொத்தை பொறுத்து எந்த வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என எந்த தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவு எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.8 திருமண பத்திரிக்கையில் எங்களது பெயர் குறிப்பிடப்படவில்லை. எனது தந்தையின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 பத்திரிக்கை யார் கொடுத்தது என்றால் பத்திரிக்கை அடித்த போது எனது பெரியப்பா சுப்பையன் கொடுத்தார். வா.சா.ஆ.8 ஐ எனக்கு யாரும் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

10. வா.சா.ஆ.8 பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள தேதி முடிந்து கிட்டத்தட்ட 27 வருடங்கள் ஆகிவிட்டன என்றாலும், உண்மையிலேயே ஒருவர் பத்திரிக்கை கொடுத்திருந்தால் அதை யாரும் பத்திரமாக வைத்திருக்கமாட்டார்கள் என்றாலும், வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல, வழக்கு தாக்கல் செய்தே 23 வருடங்கள் ஆகிவிட்டன.

11. நான் பிராதில் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்து இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**